**செ.வெ.எண்: 16** **நாள்: 09.10.2017**

கரூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகள்/ கல்வி நிறுவனங்களில் பயிலும் சிறுபான்மையின மாணவ/ மாணவியர்களுக்கு பள்ளி படிப்பு, பள்ளி மேற்படிப்பு, தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை புதியது மற்றும் புதுப்பித்தல் விண்ணப்பங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (National Scholarship Portal) சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு 30.09.2017ல் இருந்து 31.10.2017 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி அனைத்து சிறுபான்மையின மாணவ/ மாணவியர்களும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ள காலத்திற்குள் விண்ணப்பித்து பயனடையுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப. தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**